# நெல்லிக்குப்பம் நகராட்சி

## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

**2022ம் ஆண்டு ''ஜீன்'' மாதம் 31ந்தேதி (30.06.2022) வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நகர் மன்ற கூடத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ள மன்றப்பொருள்களின் விபரம்**

### நெல்லிக்குப்பம் நகர் மன்ற தலைவர் கொண்டு வரும் சிறப்பு தீர்மானம்–1

**மன்றப்பொருள்–1)** தமிழக முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஐந்து முறை தமிழக முதல்வராகவும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். தமிழ் திரைப்படத் துறையின் விடிவெள்ளியும் கலைஞர் பட்டம் பெற்றவரும் ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாவலருமான தமிழகம் மற்றும் இந்திய துணைக்கண்டத்தில் பகுத்தறிவினை புகுத்தியவரும்மான **டாக்டர் கலைஞர்.மு.கருணாநிதி** அவர்களுக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி பேரூந்து நிலைய மைய பகுதியில் பொதுமக்களுக்கோ அல்லது வானங்களுக்கோ எவ்வித இடையூறு இன்றி வெண்கலத்தால் ஆன சிலையை நிறுவ உள்னேன். அதற்கு ஏற்படும் செலவினம் நூறு சதவிகிதம் நெல்லிக்குப்பம் நகர திராவிட முன்னேற்றகழகம் வாயிலாகவும் அல்லது எனது சொந்த செலவில் செய்து கொடுக்க உள்ளேன். அதற்கான பராமரிப்பு செலவினத்தையும் நானே எனது சொந்த செலவில் செய்து கொடுக்கிறேன். எனவே, கடலூர் மாவட்ட ஆட்சியர் வழியாக தமிழக அரசு அனுமதி வழங்கவும் நகர மன்ற துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகர மன்ற உறுப்பினர்கள் ஒருமித்த ஆதரவுடன் தீர்மானத்தை நிறைவேற்றி தர கேட்டுக்கொள்கிறேன்.
**தீர்மான எண்: 132 பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.**

### நெல்லிக்குப்பம் நகர் மன்ற தலைவர் கொண்டு வரும் சிறப்பு தீர்மானம்–2

**மன்றப்பொருள்–2)** நெல்லிக்குப்பம் பேரூராட்சியாக இருந்த நிலையில் பேரூராட்சி தலைவராகவும், பின் நெல்லிக்குப்பம் நகராட்சி ஆன பின் நகர மன்ற தலைவராகவும் தொடர்ந்து 25 ஆண்டுகள் மிகவும் சிறப்பாக பணியாற்றிய திரு.**ஹாஜி அப்துல் அமீது சாயபு** அவர்களின் பெயரினை நெல்லிக்குப்பம் நகராட்சியின் அலுவலக நுழைவு வாயிலில் வைப்பதற்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழக அரசிற்கு உரிய அனுமதி கோரி அனுப்ப மன்றம் அனுமதி வழங்க உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.
**தீர்மான எண்: 133 பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–3)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் ICDS (Intergreted Children Development Scheme) அங்கன்வாடி மையம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர் அவர்களின் நேரடி கட்டுப்பாட்டில் கட்டிடங்கள், மின் இணைப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் அவர்களால் செயல்படுத்தப்படுகிறது. மேற்படி அங்கன்வாடி மையங்களில் பராமரிப்பு பணி மற்றும் மின் பழுது பணிகள் நகராட்சி வார்டு எண் 1 முதல் 30 வரை செய்து கொடுக்க வேண்டும் என பல்வேறு நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்படுகின்றன. இதை நகராட்சி பொது நிதியிலிருந்து செயல்படுத்தினால் பின்னர் அப்பணியினை மேற்கொண்டதற்கான தணிக்கைதடை ஏற்பட்டு தொகை அனுமதித்த அலுவலர்கள் மற்றும் நகரமன்றம் சொந்த தொகையினை செலுத்த வேண்டும் என்ற நிலை ஏற்படும். எனவே, மேற்படி அங்கன்வாடி மையங்களில் உள்ள கட்டிடங்கள் சேதம், மின் இணைப்பு பழுது போன்ற குறைபாடுகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கடலூர் அவர்கள் நிவர்த்திக்க இம்மன்றம் கனிவுடன் கேட்டுக் கொள்கிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 1430 /2022/இ1

**தீர்மான எண்: 134 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–4)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் (CT & PT **2021–22** ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் **5990/2022**/SBM நாள் : **11.04.2022** கடிதத்தின்படி ரூ.**24.00** இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கூடுதலாக செலவு ஆகும் ரூ.**2.00** இலட்சத்தை பொது நிதியில் செலவு செய்து கொள்ள மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. **(ம.தீ.எண்.128, நாள்.31.05.2022)** எனவே, இப்பணியினை மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி **07.06.2022** அன்று கோரியத்தில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.**30** காமராஜ் நகரில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல் பணிக்கு | **26.00** | திருமதி. எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்ததாரர்,நெல்லிக்குப்பம் | **0.01%** சதவிகிதம் குறைவு |
| | | | M/s.U.S Associate, Cuddalore | **0.92%** சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு : 1) வரப்பெற்ற இரண்டு ஒப்பத்புள்ளிகளில் **0.01%** குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருமதி. எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2) அவசரம் அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1237/2022/இ1

**தீர்மான எண்: 135 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–5)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் (CT & PT **2021–22** ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் **5990/2022**/SBM நாள் : **11.04.2022** கடிதத்தின்படி ரூ.**24.00** இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கூடுதலாக செலவு ஆகும் ரூ.**2.00** இலட்சத்தை பொது நிதியில் செலவு செய்து கொள்ள மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. **(ம.தீ.எண்.128, நாள்.31.05.2022)** எனவே, இப்பணியினை மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி **07.06.2022** அன்று கோரியத்தில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.**4** வான்பாக்கம் பகுதியில் புதிய சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிக்கு | **26.00** | திருமதி. எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்ததாரர்,நெல்லிக்குப்பம் | **0.01%** சதவிகிதம் குறைவு |
| | | | M/s.U.S Associate, Cuddalore | **0.92%** சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு : 1) வரப்பெற்ற இரண்டு ஒப்பத்புள்ளிகளில் 0.01% குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருமதி. எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2) அவசரம் அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1237/2022/இ1

**தீர்மான எண்: 136 அனுமதிக்கப்பட்டது**

***மன்றப்பொருள்–6)*** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 15வது நிதிக்குழு மான்யம் Un tied Grant 2021––22ம் ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் 31113/2021/அம்ருட்–2 நாள் : 16.05.2022 கடிதத்தின்படி ரூ.26.40 இலட்சத்திற்கு அனுமதி கீழ்காணும் பணியினை மேற்கொள்ள வழங்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணிக்காக ரூ.30.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி பெற்று (ம.தீ.எண்.298, நாள்.16.12.2022) ரூ.30.20 இலட்சம் மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் செங்கல்பட்டு அவர்களிடம் தொழிற்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது (71/2021–2022, நாள்.27.12.2021) எனவே ரூ.30.20க்கு தொழிற்நுட்ப அனுமதி பெற்றுள்ளதை வைத்து பணியினை மேற்கொள்ளவும், கூடுலாக வரும் செலவினத்தை பொது நிதியில் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தெரிவித்துள்ளதற்கிணங்க கூடுலாக ஆகும் செலவினம் ரூ.3.80 இலட்சத்திற்கு நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 07.06.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியத்தில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்ச த்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | Development of Park at HSL Nagar | 30.20 | திருமதி. எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்ததாரர்,நெல்லிக்குப்பம் | 0.01% சதவிகிதம் குறைவு |
| | | | M/s.U.S Associate, Cuddalore | 1.38% சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு : 1) வரப்பெற்ற இரண்டு ஒப்பத்புள்ளிகளில் 0.01% குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருமதி. எஸ்.புவனேஸ்வரி, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2) கூடுதலாக ஆகும் செலவினம் ரூ.3.80 இலட்சத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

2) அவசரம் அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.3743/2021/இ1

**தீர்மான எண்: 137 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–7)** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண்–29ல் உள்ள கல்கி நகரில் சுமார் 50 குடும்பங்களுக்கு மேல் வசிக்கிறார்கள். மேற்படி பகுதியில் சாலை மிகவும் பள்ளமாகவும், மண் தரையாகவும் உள்ளது. இதனால் அப்பகுதியில் கழிவு நீர் மற்றும் மழைநீர் தேங்கி பொதுமக்கள் நடந்து செல்ல இயலாத நிலை உள்ளது. மேலும், சுகாதாரகேடு ஏற்படும் நிலையும் உள்ளது. எனவே, மேற்படி இடத்தை நகர் மன்ற தலைவர் பார்வையிட்டு அதுசமயம் மேற்படி மண் சாலையை

பேவர் பிளாக் சாலையாக மாற்றுமாறு கூறினார். எனவே, பொது மக்கள் நலன் கருதி இப்பணிக்கு **6.50** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இதனை வருவாய் நிதியிலிருந்து செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1382/2022/இ1

**தீர்மான எண்: 138 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–8)** கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக கடிதம் எண்.**54**/செமதொ.அ/**2021**, நாள். **15.03.2022** கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக கடிதத்தில் நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு தமிழக அரசால் நடத்தப்படும் தமிழரசு இதழ் ஆண்டு சந்தா **40** சந்தாக்களும், ஆயுள் சந்தா **1** எண்ணிக்கையிலும் நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி ஆண்டு சந்தா எண்ணிக்கை **40** x ரூ.**240** = 9600/- ஒரு ஆயுள் சந்தா **2000** x 1 = ரூ.2000/- ஆகமொத்தம் ரூ.**11600/–**(பதினொராயிரத்து அறுநூறு மட்டும்) Joint Director (Publications) Tamil Arasu Chennai-2 என்ற முகவரிக்கு D.Dஅனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளது மேற்படி தொகையினை தமிழரசு இதழ்க்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) அனுமதிக்கலாம்.

2) நகர மன்ற தலைவர் முன் அனுமதி பேரில் தொகை வழங்கலாம்.

**தீர்மான எண்: 139 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–9)** இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பல ஆண்டுகாலமாக சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகளை பிரித்து உயர் சுரங்க Bio Mining முறை மூலம் அகற்றி நிலத்தை (Compost Yard) சீரமைக்கும் பணிக்கு மறு ஒப்பந்தபுள்ளி ரூ.**68.38** லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மாநில ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. அதற்காக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை இயக்குனரகம், சென்னை அவர்கள் வழியாக விளம்பரம் செய்ய கடிதம் வழங்கப்பட்டது. (ஒரு தமிழ் நாளிதழ் மற்றும் ஒரு ஆங்கில நாளிதழ்) விளம்பரம் செய்த வகையில் அதற்கான விளம்பரத் தொகை ரூ.**23678/–** வரப்பெற்றுள்ளது. அத்தொகையினை Sudha Ads நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1685/2022/இ1

**தீர்மான எண்: 140 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–10)** தமிழகத்தில் புதிய அரசு பதவியேற்று ஒராண்டு நிறைவு பெற்றதையொட்டி இந்கராட்சியில் நடைபெற்ற ஒராண்டு பணி சாதனைகள் மக்கள் அறியும் வண்ணம் விளம்பரம் செய்த வகையில் கீழ்காணும் தினசரி நாளிதழில் விளம்பரம் வரப்பெற்றது. அதற்கான பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. கீழ்காணும் தொகையினை சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனங்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | தினசரி நாளிதழ் பெயர் | நிகரத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | DINAMALAR | **34650.00** |
| 2 | THE DAILY THANTHI | **45045.00** |
| 3 | KAL PUBLICATIONS (P) LTD (**Dhinakaran**) | **40000.00** |
| 4 | KAL PUBLICATIONS (P) LTD (Tamilmurasu) | 20000.00 |
| 5 | MALAR PUBLICATION LIMITED | **25988.00** |

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1685/2022/இ1

**தீர்மான எண்: 141 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–11)** நெல்லிக்குப்பம் நகராட்சி பொறியியல் பிரிவில் **நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ்** வருவாய் நிதியில் நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளிலும் நகராட்சி மின் பணியாளர் மூலம் தெரு மின்விளக்கு பராமரிப்பு பணிகளை பராமரிக்க (மார்ச்/2022 மாதம் மட்டும்) தேவையான மின் உபகரணங்கள் மற்றும் மின் விளக்குகள் சப்ளை செய்யும் பணிக்கு 17.02.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு.

| ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மின் உபகரணங்கள் மற்றும் மின் விளக்குகள் சப்ளை செய்யும் பணி தொகை ரூ. |
|---|---|
| திருமதி.S .பரிமளா<br>க/பெ. சுவாமிநாதன்<br>19,மோரை எவரெட்புரம் .<br>நெல்லிக்குப்பம் | 195215/– |
| திருமதி.k .லட்சுமி<br>6 A , நடுத் தெரு ,<br>வைடப்பாக்கம்.<br>நெல்லிக்குப்பம் | 199200/– |
| திரு.கே.மாரிமுத்து<br>,ஒப்பந்ததாரர்,<br>கடலூர். | 201750/– |

<u>அலுவலகக்குறிப்பு:</u> 1.. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.எஸ்.பரிமளா, ஒப்பந்ததாரர் என்பவரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2 தெரு விளக்கு பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு மற்றும் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

<u>ந.க.எண். 4198 /2021/இ1</u>

**தீர்மான எண்: 142 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–12)** நெல்லிக்குப்பம் நகராட்சி பொறியியல் பிரிவில் வருவாய் நிதியில் நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளிலும் நகராட்சி மின் பணியாளர்கள் மூலம் தெரு மின்விளக்கு பராமரிப்பு பணிகளை பராமரிக்க (ஏப்ரல்/2022 மாதம் மட்டும்) தேவையான மின் உபகரணங்கள் மற்றும் மின் விளக்குகள் சப்ளை செய்யும் பணிக்கு 12.04.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மின் உபகரணங்கள் மற்றும் மின் விளக்குகள் சப்ளை செய்யும் பணி தொகை ரூ. |
|---|---|
| திருமதி.S .பரிமளா<br>க/பெ. சுவாமிநாதன்<br>19,மோரை எவரெட்புரம் . | 245000/– |

| | |
|---|---|
| நெல்லிக்குப்பம் | |
| திருமதி.k .லட்சுமி<br>6 A , நடுத் தெரு ,<br>வைடப்பாக்கம்.<br>நெல்லிக்குப்பம் | 250000/– |
| திரு.கே.மாரிமுத்து<br>ஒப்பந்ததாரர்,<br>கடலூார். | 250000/– |

<u>அலுவலகக்குறிப்பு:</u> 1.. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.எஸ்.பரிமளா, ஒப்பந்ததாரர் என்பவரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**2** தெரு விளக்கு பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு மற்றும் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

<u>ந.க.எண். 4198 /2021/இ1</u>

**தீர்மான எண்: 143 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–13)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள புதிய விரிவாக்க பகுதிகள் மற்றும் பழைய தெரு பகுதிகளில் தெருவின் பெயர் பலகைகள் இல்லை. இதனால் தெருவினை அடையாளம் கண்டு கொள்ள இயலவில்லை. எனவே, நகரில் பெயர்பலகை இல்லாத விடுபட்ட பகுதிகளில் பெயர் பலகைகள் வைக்குமாறு நகர மன்ற தலைவர் அவர்கள் கூறினார்கள். இதற்கான மதிப்பீடு ரூ.**5.00** இலட்சத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதிலிருந்து செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

<u>கோப்பு எண்.1382/2022/இ1</u>

**தீர்மான எண்: 144 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–14)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் **5** குளங்கள் தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புனரமைப்பு பணிகள் நடைபெறுகிறது. இதே போல் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம், **15**வது நிதிக்குழு மற்றும் பயோமைனிங், கசடுநீர்கழிவு திட்டம், நமக்கு நாமே திட்டம், மற்றும் இரண்டு இடங்களில் மேல் நிலை தண்ணீர் தொட்டிகள் புதியதாக கட்டும் பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசின் சிறப்பு சாலைப்பணிகள் என்று நிறைய பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகளை தினசரி ஆய்வு செய்யவும், தரமான பணிகள் நடைபெறுவதற்கும், பணிகளை தொங்கு தொய்வின்றி செய்து முடிக்க இந்நகராட்சியில் போதிய தொழிற்நுட்ப பணியாளர் இல்லாத காரணத்தினால் மேற்படி பணிகளை உடன் செய்து முடிக்க இயலவில்லை. எனவே, மேற்படி பணிகளை தரமாகவும், விரைவாகவும், செய்து முடிக்க **3** பணியாளர்களை தற்காலிகமாக இந்நகராட்சியில் மனித சக்தியை (மே, ஜூன், ஜீலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர்) **6** மாதத்திற்கு பயன்படுத்திக்கொள்ள நகராட்சி ஒப்பந்ததாரர் ஒருவர் வழியாக பணி மேற்கொள்ளவும் இதற்கான ஊதியம் PWD தரபட்டியலில் உள்ள வரிசை எண் **31** (a) தினக்கூலி ரூ.**639/–** விகிதத்தில் செய்து முடிக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : **1)** அனுமதிக்கலாம்.

**2)** பணியின் அவசரம் அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கியதையும், மேலும் ஒப்பந்ததாரர் வழியாக பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

<u>கோப்பு எண்.1767/2022/இ1</u>

**தீர்மான எண்: 145 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–15)** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக வளாகத்தின் மாடியில் உள்ள நகர மன்ற கூடத்தின் மேல் பகுதியில் மொட்டை மாடியில் தட்டோடுதல் பழுதடைந்து மழைகாலங்களில் மழைநீர் நகர் மன்ற கூடத்தில் கசிவு ஏற்பட்டு நகர் மன்ற கூடத்தில் உள்ள மின் ஒயரிங்கள் எரிந்துவிட்டது. மேலும், பால்சீலிங் அமைப்புகள் பழுதடைந்துள்ளது. இதனால் நகர் மன்ற கூட்டம் நடத்த இடையூறாக உள்ளது. எனவே, இப்பணியின் அவசரம் அவசியம் கருதி வெதரிங்கோர்ஸ் அமைக்க மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.1778/2022/இ1</u>

**தீர்மான எண்: 146 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–16** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் நுழைவு வாயிலில் உள்ள கழிநீர் கால்வாய் சிமெண்ட் சிலாப் பழுதடைந்து உடைந்து விட்டது. எனவே, அப்பகுதியில் செல்லும் பொது மக்கள் மற்றும் கனரக வாகனங்கள் அந்த பள்ள பகுதியில் மக்கள் விழுந்து விழும் அபாயம் உள்ளது. எனவே, மேற்படி இடத்தை ஆய்வு செய்த நகர் மன்ற உறுப்பினர், நகராட்சி ஆணையாளர் உடனடியாக மேற்படி பள்ளத்தை மூடுவதற்கு தேவையான மிக கனமான சிமெண்ட் சிலாப் போட்டு அடைக்குமாறு கூறியுள்ளனர். எனவே, மேற்படி பணிகள் அவசரம் அவசியம் கருதி மேற்படி பள்ளப்பகுதியை சிமெண்ட் சிலாப் அமைக்க மதிப்பீடு ரூ.10000/–த்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து செய்து கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.1694/2022/இ1</u>

**தீர்மான எண்: 147 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–17)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 15வது நிதிக்குழு மான்யம் 2020–21 ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் 21191/2021 அம்ரூட்–2 நாள் : 13.11.2021ன்படி ரூ.14.00 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இப்பணிக்கான ஒப்பந்தபுள்ளி 31.05.2022 அன்று கோரியத்தில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்ச த்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | Construction of MCC at MPL office | 14.00 | திரு.கே.மாரிமுத்து ஒப்பந்ததாரர்,நெல்லிக்குப்பம் | 0.07% சதவிகிதம் குறைவு |
| | | | திரு.எம்.செந்தாமரைக்கண்ணன் ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் | 1.72% சதவிகிதம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u> : 1) வரப்பெற்ற இரண்டு ஒப்பத்புள்ளிகளில் 0.07 % குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு.கே.மாரிமுத்து, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2) பணியின் அவசரம் அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.3741/2021/இ1

**தீர்மான எண்: 148 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–18)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 15வது நிதிக்குழு மான்யம் 2020–21 ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் 21191/2021 அம்ரூட்–2 நாள் : 13.11.2021ன்படி ரூ.21.50 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இப்பணிக்கான ஒப்பந்தபுள்ளி 31.05.2022 அன்று கோரியத்தில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்ச த்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | Improvement works to decentralized Micro compost plant at Municipal office Campus Premises | 21.50 | திரு.கே.மாரிமுத்து ஒப்பந்ததாரர்,நெல்லிக்குப்பம் | 0.01% சதவிகிதம் குறைவு |
| | | | திரு.எம்.செந்தாமரைக்கண்ணன் ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் | 0.27% சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பத்புள்ளிகளில் 0.01 % குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு.கே.மாரிமுத்து, ஒப்பந்ததாரர், நெல்லிக்குப்பம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**2.**பணியின் அவசரம் அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.3741/2021/இ1

**தீர்மான எண்: 149 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–19)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளில் முக்கிய இடங்கள் மற்றும் போக்குவரத்து அதிகம் உள்ள இடங்களில் இரவு நேரங்களில் தெருவிளக்கு வசதி குறைவாக உள்ளது. அதனை போக்கம் விதமாக விதமாக முக்கிய சந்திப்புகளில் 150 W LED மின் விளக்குகள் வாங்கும் பணிக்கு ரூ.8.52 இலட்சம் மதிப்பீட்டில் அரசு விதித்துள்ள விலை விகிதத்தின்படி ஒப்பந்தபுள்ளி 22.06.2022 அன்று கோரியத்தில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்ச த்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 150 W LED Flood light With Dimmable Drive and 5 Pin NEMA Socket inluding | 8.52 | M/s. எவர்கிரீன் டிரேடர்ஸ், ஒப்பந்ததாரர், கடலூார் | 0.01% சதவிகிதம் குறைவு |
| | | | M/s வெர்ஜீரீன் டிரேடர்ஸ், ஒப்பந்ததாரர், பாண்டிச்சேரி | 0.71% சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு வரப்பெற்ற இரண்டு ஒப்பத்புள்ளிகளில் 0.01 % குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள M/s. எவர்கிரீன் டிரேடர்ஸ், ஒப்பந்ததாரர், கடலூார் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

தெரு விளக்கு அவசரம் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி

பெற்று பணி உத்தரவு வழங்கி தொகை அனுமதித்தை மன்றம் ஏற்கலாம்.
கோப்பு எண்.1694/2022/இ1
**தீர்மான எண்: 150 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–20)** நெல்லிக்குப்பம் நகராட்சி பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்படும் டாடா ஏசிஇ TN-31/AH 6556 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டதால் அவசர அவசியம் கருதி நெல்லிக்குப்பம் ஆட்டோ கேரேஜ் மெக்கானிக் லேபர் ஒர்க்ஸ் பணி மனையில் பழுதுகள் சரி செய்யப்பட்டது . இதற்கு செலவின தொகை ரூ.9450/– . இத்தொகை நகராட்சி ஒட்டுனர் திரு.B.விமல்ராஜ் அவர்களால் செலுத்தப்பட்டுவிட்டது. அதனால் ரூ.9450/– யை திரு.B.விமல்ராஜ் ஒட்டுனர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு.** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.
**(ந.க.எண் 1557/2022/எச்1)**
**தீர்மான எண்: 151 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–21)** நெல்லிக்குப்பம் நகராட்சி பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்படும் டாடா ஏஸ் TN 31 AH 6556 வாகனம் தகுதி பெறுவதற்கான பணிகள் மன்ற தீர்மான எண் . 82 நாள் . 31.05.2022 ன் படி 23.06.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரா் பெயர்/ முகவரி | செலவின தொகை | வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | ஓம் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் ,<br>DSN நகர்<br>நெல்லிக்குப்பம் மெயின் ரோடு<br>காரமணிக்குப்பம் | ரூ.87674/– | சிறு குறு தொழில் |
| 2 | விஜியலட்சமி ஆட்டோ மொபைல்ஸ் ,<br>S-6 சிப்காட்<br>செம்மண்டலம்<br>கடலூர் | ரூ.92276/– | சிறு குறு தொழில் |

<u>அலுவலகக்குறிப்பு:</u> . வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள ஓம் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் ,DSN நகர், நெல்லிக்குப்பம் மெயின் ரோடு, காரமணிக்குப்பம் அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.928/2022/எச்1)**
**தீர்மான எண்: 152 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–22)** கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை கூட்டத்தில் வழங்கிய அறிவுரையின் படி நெல்லிக்குப்பம் நகராட்சி பொதுசுகாதாரம் டெங்கு சிக்கன்குனியா கோவிட் – 19 போன்ற தொற்று நோய்கள் நகராட்சி பகுதியில் வராமல் தடுத்திடம் பொருட்டு பொது மக்களுக்கு உரிய விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் , கொசு புழுக்கள் உருவாகும் கொள்கலன்களை அழித்திடும் பணிக்கும் DBC பணியாளர்கள் ஏப்ரல் 2022 முதல் ஜுன் 2022 முடிய மூன்று மாதங்களுக்கு 40 பணியாளர்களை நியமித்து பணி மேற்கொண்டு வரும் நிலையில் அவர்களின் அனுமதி காலம் 30.06.2022 தேதியுடன் முடிவடைவதால், தற்சமயம் தமிழகத்தில் கோவிட் – 19 தொற்று கண்டவர்களின் எண்ணிக்கை கூடுதலாக வருவதினாலும் தென்மேற்கு பருவ மழை தொடா்ந்து பெய்து வருவதினால் கொசுக்களின் பெருக்கம் கட்டுப்படுத்த வேண்டிய சூழ்நிலை உள்ளதினாலும் , நகராட்சி நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு 20 –

DBC பணியாளர்களை மகளிர் சுய உதவிக்குழு மூலம் நியமித்து பணி மேற்கொள்ள அனுமதியும் அதற்கான செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. துணை இயக்குநர் ( சுகாதார பணிகள் ) கடலூர் அவர்களின் கடிதம் ந.க.எண் . 6404/அ1/2016 நாள். 19.010.2016 ன் படி பணியாளர் ஒருவருக்கு ரூ.200/— என்கின்ற தினக்கூலி அடிப்படையில் விவேகானந்தர் மகளிர் சுய உதவிக்குழு மூலம் நியமித்து பணி மேற்கொண்டது போல ஜூலை 2022 முதல் செப்டம்பர் முடிய (01.07.2022 முதல் 30.09.2022 முடிய) மூன்று மாதங்களுக்கு மேற்கண்ட தினக்கூலி அடிப்டையில் 20 பணியாளர்களை நெல்லிக்குப்பம் விவேகானந்தர் மகளிர் சுய உதவிக்குழு மூலம் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

3. இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி /SUC நிதியிலிருந்து வழங்கிடவும் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் 2015/2022/எச்1)**
**தீர்மான எண்: 153 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்—23)** நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர் செங்கற்பட்டு அவர்களின் அலுவலகத்திலிருந்து 20.06.2022 தேதியில் வரப்பெற்ற வாட்ஸ்அப் செய்தி மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் தெரிவித்துள்ளபடி தொடர்ந்து வருகின்ற நான்காம் சனிக்கிழமை (25.06.2022) தூய்மையான நகரங்களுக்கான மக்கள் இயக்க செயல்பாடுகளாக நகரில் உள்ள வார்டுகளில் ஒரு வார்டினை மாதிரி வார்டாக தேர்வு செய்து அவ்வார்டில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் மற்றும் இதர வார்டுகளுக்கும் குப்பை தரம் பிரித்து பணியாளர்கள் வருகை தரும் போது வழங்கிடுவதற்கு இரண்டு வண்ண (பச்சை மற்றும் நீலம்) குப்பை தொட்டிகள் வழங்கி அவ்வார்டில் வசிக்கும் அனைத்து குடியிருப்போரும் மற்றும் இதர வார்டுகளுக்கும் குப்பை 100% தரம் பிரித்து வழங்கிட விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், பள்ளிகளுக்கிடையே 1. என் குப்பை எனது பொறுப்பு, 2. நெகிழினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் 3. மரம் நடும் அவசியம் என்கின்ற தலைப்புகளின் கீழ் கட்டுரை போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் பட்டிமன்றம் போன்றவை நடத்தப்பட்டு வெற்றி பெறும் மாணவ மாணவிகளை பாராட்டு செய்து சான்று வழங்கிடுமாறு தெரிவித்து உள்ளமையால், நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் வார்டு எண் 29 ஒன்றினை ஒன்றினை மாதிரி வார்டாக தேர்வு செய்து அப்பகுதியில் இருக்கக்கூடிய குடியிருப்புகளுக்கு இரண்டு வண்ண குப்பை தொட்டிகள் வழங்கிடவும் பள்ளி மாணவர்களுக்கு மேற்கண்ட தலைப்புகளின் கீழ் பேச்சுப்போட்டி, கவிதைப் பேட்டி மற்றும் கட்டுரைப் போட்டி நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு சான்று மற்றும் பரிசு பொருட்கள் வழங்கிடவும் உரிய விழா மேடை மற்றும் இதர ஏற்பாடு செய்திடவும், கலந்து கொள்ளும் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு மரியாதை செய்ய மற்றும் பொதுமக்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு சிற்றுண்டி அல்லது ஸ்நாக்ஸ் வழங்கிடவும் அனுமதியும், மேற்கண்ட அனைத்து நிகழ்வுகளும் நடத்திடுவதற்கு உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை திடக்கழிவு பயன்பாட்டு கட்டண நிதியிலிருந்து (SUC) மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண் 1347/2022/எச்1)
**தீர்மான எண்: 154 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–24)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் உள்ள பொதுப்ணித்துறைக்கு சொந்தமான கால்வாய்களில் உள்ள சிறுபாலங்கள் பழுதடைந்து பொதுமக்கள் நடந்து செல்ல வழியில்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும், மழை வெள்ள காலங்களில் போக்குவரத்திற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, பொது மக்கள் நலன் கருதி கீழ்கண்ட இடங்களில் புதிதாக சிறுபாலம் அமைக்க பொதுப்பணித்துறை நிர்வாகத்திற்கு கடிதம் வரைவு வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. சரவணபுரம் கால்வாய் சிறுபாலம் வார்டு எண்–25
2. ரயில்வே பீடர் சாலை சிறுபாலம் வார்டு எண்–18
3. கரும்பு அபிவிருத்தி சாலை சிறுவாலம் வார்டு எண்–25
4. மோரை மேட்டுத் தெரு கால்வாய் சிறுபாலம் வார்டு எண்–25
5. கல்கி நகர் கால்வாய் சிறுபாலம் வார்டு எண்–29
6. மாருதி நகர் கால்வாய் சிறுபாலம் வார்டு எண்–29
7. திடீர்குப்பம் கால்வாய் சிறுபாலம் வார்டு எண்–3

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

<u>கோப்பு எண். 1525/2022/இ1</u>

**தீர்மான எண்: 155 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–25)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்–26ல் உள்ள சிவசண்முகம் நகர் பகுதியில் உள்ள மிக பழமை வாய்ந்த சிவன் கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. மேற்படி, கோயிலுக்கு செல்லும் பாதையானது மக்கள் பயன்படுத்த இயலாத அளவுக்கு மிக மோசமாக உள்ளதாகவும், இச்சாலையை பொதுமக்கள் பயன்படுத்தும் முக்கிய பிரதான சாலையாக இருப்பதாலும் மேற்படி பகுதியில் சாலைகள் மண் சாலையாக உள்ளதால் வண்டி வாகனங்களும் பொதுமக்களும், நடந்து செல்ல இயலாமல் உள்ளதாக அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்களும் கோரிக்கை வைத்தனர். மக்கள் பயன்பாட்டை கருத்தில் கொண்டு கோயில் சாலையை தற்காலிகமாக கிரவல் மண் மற்றும் எம்சாண்ட் கலந்து சாலையை சீரமைக்கும் பணிக்கு தற்காலிகமாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஆகும் செலவினம் ரூ.1,00,000/–த்தை பொது நிதியிலிருந்து செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 1681/2022/இ1

**தீர்மான எண்: 156 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–26)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் மற்றும் அலுவலர்கள் மிக சிரமப்படுவதாக நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையர் அவர்களிடம் புகார் கூறினார்கள். எனவே, பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் அலுவலக வளாகத்தில் புதிதாக தானியங்கி சுத்திகரிப்பு செய்யும் குடிநீர் இயந்திரம் ஒன்று வாங்கி அளிக்குமாறு நகர்மன்ற தலைவர் அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே புதியதாக தானியங்கி குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் வாங்குவதற்கு அரசு நிர்ணயித்துள்ள சந்தை விலையில் பொது நிதியில் வாங்குவதற்கு இதற்கான செலவு ரூ.1,48,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : k‹w« mDkÂ¡fyh«**

<u>கோப்பு எண். 1671/2022/இ1</u>

**தீர்மான எண்: 157 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–27)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் **13** எண்ணிக்கை கொண்ட மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் **37** ஆழ்துளை கிணறுகள் மூலம் சப்மெர்சிபன் மின்மோட்டார் பம்பு செட்டுகள் மூலம் தண்ணீர் ஏற்றப்பட்டு தினசரி காலை, மாலை இரண்டு வேலைகள் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் மேற்படி மோட்டார் பம்புகளை பராமரிக்க இந்நகராட்சியில் **1** மின் கம்பியாளர் மட்டுமே உள்ளார். மேலும், மேற்படி மோட்டார் பம்புகள் பழுதடைந்தால் அதனை உடனடியாக பழுது பார்க்க பணி ஆட்கள் இல்லை. இதனால் தண்ணீர் விநியோகம் மிகவும் பாதிப்பு அடைகிறது. மேலும், குடிநீர் பணி தடைபடும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும் நகரில் உள்ள மேல்நிலை தண்ணீர் தொட்டி வளாகத்தில் உள்ள சப்மெர்சிபள் மோட்டார் பம்புகள் மற்றும் மின் மோட்டார் பம்புகள் உதிரிபாகங்கள் பழுதடைந்தால் அதனை உடனடியாக சரி செய்யவும், பழுதடைந்த மோட்டார் பம்புகள் காயில்கள் புதியதாக கட்டுவதற்கும் மதிப்பீடு ரூ.**9.50** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இதனை குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : k‹w« mDkÂ¡fyh«

<u>கோப்பு எண். 1740/2022/இ1</u>

**தீர்மான எண்: 158 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–28)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் **13** கொண்ட மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் உள்ளது. மேற்படி மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் மூலம் நகரில் உள்ள பொது மக்கள் காலை, மாலை இரண்டு வேலைகள் குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் தேக்கத் தொட்டி காவலர்கள் **4** பேரும், பிட்டர் ஒருவர் மட்டுமே உள்ளனர். மேலும், குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பணி ஆட்கள் இல்லை. மேலும், நகரில் உள்ள **62** கி.மீ. குடிநீர் பகிர்மான குழாய்கள் மூலம் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. பொதுக்குழாய்கள் **152** எண்ணிக்கையில் உள்ளது. தற்சமயம் மேற்படி மெயின் குழாயில் உடைப்பு ஏற்பட்டாலோ அல்லது மெயின் குழாயில் பஸ்ட் ஏற்பட்டாலோ அதனை உடனடியாக சரிசெய்யவும் மேலும், குடிநீர் பிரிவில் போதிய பணி ஆட்கள் இல்லாத காரணத்தால் குடிநீர் விநியோகப்பணி தடைபடும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும் மேற்படி பணிகளை தனியார் மூலம் செய்து முடிக்க மதிப்பீடு ரூ.**9.50** லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

<u>கோப்பு எண். 1711/2022/இ1</u>

**தீர்மான எண்: 159 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–29)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட **1** முதல் **30** வார்டுகளில் உள்ள புதிய குடியிருப்பு பகுதிகளில் குடிநீர் விநியோக மெயின்குழாய்கள் இல்லாமல் தண்ணீர் சப்ளை செய்ய இல்லாமல் உள்ளது. இதன் காரணமாக அப்பகுதியில் உள்ள மக்கள் குடிநீர் இல்லாமல் அவதிபட்டு வருகிறார்கள். எனவே, மேற்படி விடுபட்டுள்ள பகுதியில் குடிநீர் விநியோக மெயின் குழாய் அமைக்குமாறு நகர் மன்ற தலைவர் அவர்கள் கூறினார்கள். எனவே, பொதுமக்கள் நலன் கருதியும், பணியின் அவசரம் அவசியம் கருதி வார்டு எண்**1** முதல் **30** வரை உள்ள விடுபட்டுள்ள பகுதியில் குடிநீர் விநியோக மெயின்குழாய் அமைக்க மதிப்பீடு ரூ.**9.00** இலட்சத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை குடிநீர் நிதியில் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

<u>கோப்பு எண். 1777/2022/இ1</u>

**தீர்மான எண்: 160 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்—30)** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு உட்பட்ட கீழ்கண்ட வார்டுகளில் புதிய மின் விளக்குகள் அமைக்க ஆய்வு மேற்கொண்டதில் மின் கம்பங்களில் மின் வயர்கள் இல்லாததால் புதியதாக அமைக்க மின் வாரியத்திற்கு மதிப்பீடு தயார் செய்ய நகராட்சி ஒயர்மேன் மற்றும் நகராட்சி பொறியாளர் தனது குறிப்பல் தெரிவித்துள்ளதற்கிணங்க கீழ்கண்ட இடங்களில் தெருவிளக்கு அமைக்க மின்சார வாரியத்திற்கு கடிதம் வரைவு வைக்க மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | விளக்கு எண் எண்ணிக்கை | தெரு பெயர்கள் |
|---|---|---|---|
| 1 | 1 | 14 | புது நகர், விஸ்வநாதபுரம் |
| 2 | 2 | 14 | சோழவல்லி புதுநகர் |
| 3 | 6 | 9 | அப்துல் ரஹ்மான் நகர் |
| 4 | 7 | 6 | ராஜாஜி விதி விரிவாக்கம், அண்ணாநகர் |
| 5 | 13 | 25 | ஸ்ரீவாரி நகர், ராசாத்தி நகர், விஜபி நகர், நர்மதா நகர் |
| 6 | 14 | 8 | விஜயலட்சுமி நகர் |
| 7 | 18 | 7 | நூர்முகமது நகர் |
| 8 | 21 | 13 | பத்மாவதி நகர் |
| 9 | 23 | 25 | ரகமத் நகர், மரக்காயர் நகர் |
| 10 | 26 | 31 | மல்லிகை நகர் |
| 11 | 27 | 5 | கமலாகணேசன் |
| 12 | 29 | 21 | மாருதி நகர், கல்கி நகர், பாஷ்யம் நகர், விஜயலட்சுமி நகர் |

கோப்பு எண். 1777/2022/இ1

**தீர்மான எண்: 161 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்—31)** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான வார்டு எண்.6ல் உள்ள HSL நகரில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக புதியதாக பூங்கா அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது. தற்சமயம் மேற்படி இடத்தில் தண்ணீர் வசதியும், மின் வசதியும் இல்லை. இதனால் பூங்கா பணிகள் தடைப்பட்டுள்ளது எனவே, பணியின் அவசரம் அவசியம் கருதியும், பூங்காவின் பணி அரசின் திட்டப்பணி என்பதால் விரைவில் பணிகள் முடிக்க வேண்டியுள்ளதால் பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்படி பகுதியில் புதிய ஆழ்துளைகுழாய் கிணறு அமைக்கவும், இதற்கு தேவையான மின் இணைப்பு பெற வேண்டியுள்ளதால் இதற்கு சேர்த்து மொத்தம் ரூ.1.50இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 1739 /2022/இ1

**தீர்மான எண்: 162 அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்—32)** அரசாணை (எம்.எஸ்) எண்.119/நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் (எச்.எஸ்.2) துறை நாள்.06.03.2018ன்படி கடலூர் முதல் மடப்பட்டு வரை கி.மீ.3/0—41/910 (SH-09) ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் மேம்பாடு செய்யப்படவுள்ளதால் நெல்லிக்குப்பம் நகராட்சியில் சாலை ஓரத்தில் உள்ள குடிநீர்க்குழாய்களை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகிறது எனவே, நெல்லிக்குப்பம் நகரம் மற்றும் வாழப்பட்டு கிராமத்தில் சாலை ஓரத்தில் இணைப்பில் உள்ள குடிநீர்க்குழாய்களை மாற்றியமைக்க தேவையான மதிப்பீட்டை தெரியபடுத்த (க.எண்.7/2019/வஅ/ நாள்.29.10.2019) கோட்ட பொறியாளர் (நெ) சென்னை—கன்னியாகுமரி

தொழிற்தட திட்டம், கடலூர் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றது. அதனையொட்டி இந்நகராட்சியில் குடிநீர் குழாய்களை மாற்றியமைக்க திட்ட மதிப்பீடாக ரூ.400.00 இலட்சம் தேவைப்படும் என்பதை கோட்டப்பொறியாளர் (நெ) கடலூர் அவர்களுக்கு 18.12.2019 தேதிய கடிதம் வரைவு அனுப்பி வைக்கப்பட்டது.

அதனையொட்டி உதவிக்கோட்ட பொறியாளர் (நெ) சென்னை கன்னியாகுமரி, தொழிற்தட திட்டம், கடலூர் (கூ.பொ) க.எண்.35/2021 இ.வ.அ/நாள்.07.06.2022) தேதிய கடிதத்தில் கடலூர்–மடப்பட்டு வரை (SH-09) ஏற்கனவே உள்ள இரு வழிசாலையை நான்கு வழிசாலையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்ட நிலையில் தற்போது நெல்லிக்குப்பம் நகராட்சியில் உள்ள வியபாரிகள் ஒத்துழைப்பு தராததால் அரசு கொள்கை முடிவின்படி நான்கு வழிச்சாலை கை விடப்பட்டு இரண்டு வழிச்சாலையாகவே அகலபடுத்தி மேம்பாடு செய்ய தீர்மானிக்கப்பட்டு அதன்படி மதிப்பீடுகள் தயார் செய்து பணிகள் நடைபெற்று வருகிறது என தெரிவிக்கப்பட்டது.

மேலும், நான்கு வழிசாலையாக அகலப்படுத்தும் பட்சத்தில் மட்டுமே குடிநீர்குழாயை மாற்றி அமைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. தற்போது இரண்டு வழிச்சாலையாக மேம்பாடு செய்யப்படுவதால் நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் குழாய்களை மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் நெடுஞ்சாலைதுறைக்கு இல்லை. மேலும், நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான மாநில நெடுஞ்சாலையை மேம்பாடு செய்ய நெல்லிக்குப்பம் ஆணையரின் அனுமதி பெற தேவை இல்லை என உதவிக் கோட்டப்பொறியாளர் (நெ) கடலூர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அக்கடிதத்தில் நெல்லிக்குப்பம் பகுதியில் பணியின்போது சேதம் அடைந்த **கிமீ 10/030/–10/130 100 மீட்டர் (RHS & LHS) மற்றும் கிமீ 10/580–11/000 (420m) (RHS & LHS)** ஆகிய இடங்களில் உள்ள குடிநீர் குழாய்களை மாற்றி அமைக்க புதியதாக மதிப்பீடு தயார் செய்து அனுப்பி வைத்தால் திட்ட இயக்குநருக்கு தெரிவித்து நிதி ஆதாரம் பெற்று தர இயலும் எனவும் தவறினால் சாலைப்பணிகள் குடிநீர் குழாய்களை மாற்றி அமைக்காமல் முடிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத்துறை பணிகள் யாவும் உயர் அலுவலர்கள் அறிவுரைப்படி அரசு ஆணைகள் படியும் நடைமுறைப்படுத்துவதால் நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் ஒப்புதல் நெடுஞ்சாலைத்துறைக்கு தேவைப்படாது எனவே, அரசுப்பணிகள் தடையின்றி செயல்படுத்த தொடர்புடைய துறைகள் முழு ஒத்துழைப்பினை நல்கிட சிறப்பாகும் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) அனுமதிக்கலாம்.

**2)** நெடுஞ்சாலையின் ஓரப்பகுதியில் நெடுஞ்சாலை துறையினரால் கட்டுப்பட்டுள்ள வடிகால் வாய்கால் கீழ் பகுதியில் நெல்லிக்குப்பம் நகராட்சியிற்கு சொந்தமான பிரதான குடிநீர் மெயின் குழாயின் மேல் பகுதியில் வடிகால் வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் மட்டும் பிரதான குடிநீர் மெயின் குழாயினை சாலையின் ஓரப்பகுதியில் அமைத்துதர நெடுஞ்சாலைத்துறைக்கு கடிதம் வரைவு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

<u>கோப்பு எண். 3398/2019/இ1</u>

**தீர்மான எண்: 163** அனுமதிக்கப்பட்டது

ஆணையாளர்

நெல்லிக்குப்பம் நகராட்சி